**தென் மாகாண சபை – 2021**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென் மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்தோபர் 21 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியொன்று 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் சமர்ப்பிப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக் கூற்றுக்கள் தென் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான தேறிய சொத்துக்களின் மீதி ரூபா.677,608,036 ஆன போதிலும் மாகாண நிதிய கணக்கில் அது ரூபா.673,254,332 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் மாகாண நிதிய கணக்கில் தேறிய | உரிய நிறுவனத்தின் தேறிய சொத்துக்களை சரியாக தயாரிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | நிதிக்கூற்றுக்களின் மீதி மற்றும் நிதிய கணக்கின் மீதி ஆகியவை ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொ்த்துக்கள் ரூபா.4,353,704 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா.1,661,792,690 ஆன போதிலும் அது நிதிக் கூற்றுக்களில் ரூபா.1,590,941,716 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா.70,850,947 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு மாகாணத் திறைசேரியினால் பேணப்படாததுடன் இந்த தவறுகள் குறித்த செலவின தலைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | மாகாண நிதிய கணக்கினை தயாரிக்கும்போது பெறுமானத் தேய்வுகளின் சரியான தன்மையை பரிசோதித்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா.847,478,918 கூட்டு பெறுமதியுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கககுக்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா.86,659,938 இனால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு மாகாண திறைசேரியினால் பேணப்படாததுடன் இறுதி மீதி மாத்திரம் மாதிரியின் மூலம் வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த தவறுகள் செலவின தலைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். | மாகாண நிதிய கணக்கினை தயாரிக்கும்போது பெறுமானத் தேய்வுகளின் சரியான தன்மையை பரிசோதித்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தென் மாகாணசபை நிதிய கணக்குகளை தயாரிக்கும்போது குறைந்து செல்லும் முறையின் அடிப்படையில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் கணக்கினை தயாரிக்கும்போது எளிமையான முறை ஒன்றில் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா.869,836 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வினை கணிப்பிடல் மாகாணத் திறைசேரியினால் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும் அந்த சொத்துக்களை பேணுதல் செலவின தலைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமையும். | மாகாண நிதியக் கணக்கிணைத் தயாரிக்கும் போது பின்பற்றப்படும் பெறுமானத்தேய்வு கொள்கையின் அடிப்படையில் 26 செலவினத் தலைப்புகளின் பெறுமானத் தேய்வு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மாகாண நிதியக் கணக்கின் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தென்மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் முறையே ரூபா.183,576,902 மற்றும் ரூபா.53,704,183 ஆன போதிலும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதிகள் முறையே ரூபா.2,133,069,606 ரூபா.125,669,921 ஆகும். அதற்கமைய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா.2,021,458,442 ஆன வேறுபாடொன்று நிலவியது. | மாகாண நிதியப் பெறுமதி சரியானது என்பதும் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகள் தொடர்பில் சான்றுபடுத்தல் ஒன்றை வழங்க முடியாது என்பதும். | நிதியக் கணக்கின் பெறுமதிகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளை இணக்கம் செய்ய வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- வேண்டுமென்றே விட்டுவிடுதல்கள் மமற்றும் உள்ளக கட்டுப்பாட்டிலான கவனயீனங்கள் மோசடிகள் இடம்பெறுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 302 – தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்** | | |
| தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தென்மாகாண சபை சிங்கள மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்க்ககும் திறந்த அடிப்படையிலான போட்டிப் பரீட்சை - (2021 ஆம் ஆண்டு) இற்கு 10,493 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், 10,312 விண்ணப்பதாரிகளால் ரூபா.1,000 படி ரூபா.10,312,000 ஆன தொகை பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் தேசிய மற்றும் மாகாண சபை பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு வரிசை கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளமையால் குறித்த பணத்தை மீண்டும் விண்ணப்பதாரர்களுக்கு வழங்குமாறு ஆளுநர் அறிவுரை வழங்கியிருந்த போதிலும் விண்ணப்பதாரர்களுக்கு குறித்த பணம் மீள செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த பரீட்சைக் கட்டணங்கள் அலுவலகத்தின் நடைமுறை கணக்கின் வைப்புக்களாக இணையதள முறையில் விண்ணப்பித்தல் மேற்கொள்ளப்படுவதால் விண்ணப்பங்கள் மற்றும் பற்றுச் சீட்டுகள் தபால் மூலம் வரவழைக்கப்படவில்லை என்பதும் அதற்கமைய விண்ணப்பதாரர்களுக்கு பணம் பணத்தை செலுத்துவதற்கு நடைமுறையில் வழிமுறை ஒன்றினை தயாரிப்பதற்கு முடியாதுள்ளமையின் அடிப்படையில் பணம் இதுவரையிலும் செலுத்தப்படவில்லை என்பது. | விண்ணப்பதாரர்களால் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்களை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.2 தலைப்பு 304 – தென் மாகாண முதல் அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்** | | |
| விசேட தேவையுடைய கிராமிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் தென்மாகாண பிரதான அமைச்சின் ரூபா.35 மில்லியனான நிதி ஏற்பாடுகளில் 03 கட்டங்களில் நலனாளிக்கு ரூபா.40,000 வழங்கும் நிகழ்ச்சி திட்டத்திற்காக 2021 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் ரூபா.19,248,000 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பணிகள் நிறைவு செய்யப்பட்ட 232 நலனாளிகளுக்கு மாத்திரம் மொத்த தொகையும் கிடைத்திருந்ததுடன் முதலாவது மற்றும் இரண்டாவது சுற்றில் பணம் மாத்திரம் செலுத்தப்பட்ட ரூபா.9,968,000 ஆன தொகையில் பணிகள் நிறைவு செய்யப்படாமையால் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை. செயற்திட்டத்தின் கீழ் மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்காக 2021 மார்ச் மாதம் பதிவழிக்கப்பட்ட ரூபா.380,000 பெறுமதியான 19 காசோலைகள் 2022 பெப்ரவரி 10 ஆம் திகதி வரையிலும் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்படாது கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா.181,000 பெறுமதியான காசோலைகள் 25 அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் அதிகளவான காலம் நாடு மூடப்பட்டிருந்த காரணத்தால் மற்றும் நடாத்தப்பட்ட தேர்தல் காரணமாக செயற்திட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் அறிவுரை வழங்கி இருந்தமையால் நலனாளிகளுக்கு செலுத்த முடியாது போயிருந்தது. 2020.06.30 திகதி இந்த செயல் திட்டத்தை நிறைவு செய்யுமாறு அறிவுரை கிடைத்தமையால் காசோலைகளை வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாகவும் தொடர்ந்தும் இது தொடர்பில் ஆராய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும். | செயல் திட்டங்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.2.1 தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **பெற வேண்டிய கணக்குகள்** | | |
| தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் நடைமுறை அல்லாத பெற வேண்டியவையாக ரூபா.12,831,262 ஆன மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா.2,760,717 ஆன தொகை 2001 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படும் செயலிழந்த கடன் மீதி குறித்த செயற்திட்ட மற்றும் வியாபார கடன் கொடுத்தோரிடம் இருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா.1,654,974 மற்றும் ரூபா.553,505 ஆன உள்நாட்டு விதை கடன் மீதியை அறவிடுதல் தொடர்பில் பிரதம செயலாளரின் அலுவலகத்தின் சட்ட பிரிவின் மூலம் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | நிலுவை கடன் தொகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.2.2 ரூஹுணு சுற்றுலாப் பணியகம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ருஹுணு சுற்றுலா பணியகத்தினால் ரூபா.31,609,408 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்ம ஹிக்கடுவ அபிமங்சல கட்டிடம் 2016 ஏப்ரல் 15 ஆம் திகதி உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் வெளிவாரி தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய முறையில் மாதாந்த குத்தகை அறவிடப்படாமையால் ரூபா.10,100,000 ஆன நிலுவை குத்தகை தொகையும் அதற்குரிய தண்டப்பணம் | ஆளுநரின் தீர்மானத்தின் அடிப்படையில் 2022.03.31 ஆம் திகதியில் உள்ளபடியான நிலுவைப் பணத்தை முழுமையாக செலுத்துவதாயின் தண்டப்பணத்தில் இருந்து விடுவிப்பதாகவும் சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. | நிலுவைத் குத்தகை மற்றும் தண்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.1,350,000 எனுமாறு ரூபா.11,450,000 நிலுவையாக காணப்பட்டது. | | |
| (ஆ) | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் | | |
| | ருஹுணு சுற்றுலா பணியகத்தின் 03 நிறுவனங்களுக்கு உரிய சொத்துக்களினுள் ரூபா.102,985,823 தொகையான சொத்துக்கள் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. | இந்த நிறுவனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளது. | குறித்த சொத்துக்களிலிருந்து உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2.3 தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள் | | |
| (அ) | தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் கொரோனா தொற்றுநோய் நிலையின் அடிப்படையில் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு ரூபா.10,000 படி ரூபா.5,800,000 ஆன தொகை கடனாக 2019 ஆண்டினுள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த கடன் தொகையில் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தொடர்ந்தும் ரூபா.5,329,000 ஆன மீதி ஒன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா.10,000 படி ரூபா.5,800,000 ஆன கடன் தொகை வழங்கப்பட்டது. அவற்றுள் ரூபா.581,000 அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது. | நிலுவை கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்காக தென் மாகாணத்தினுள் 1,316 பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 233,500 மற்றும் செயலிழந்த அனுமதிப்பத்திரங்களில் இருந்து 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக இழக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திர கட்டண வருமானங்கள் மற்றும் சேவை கட்டண வருமானம் ரூபா 731,250 உம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்தும் நிவாரணங்களை கோரி போக்குவரத்து அமைச்சரினால் ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் அதிகாரசபையின் கட்டுப்பாட்டுச் சபைக்கு அறிவித்துள்ளமை. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 305 – தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள் | | |
| (i) | உணவட்டுன பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவின் மருந்து களஞ்சியத்தில் 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி காணப்பட்ட மருந்துகள் இடையே 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் 2002 பிப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் கால ரீதியான தேவைப்பாடுகளின் பிரகாரம் மருத்துவமனைகள் இடையே பகிர்ந்தளிக்கப்படாமையால் காலாவதியாகியிருந்த | இந்த மருந்து பொருள் இருப்பினை கைத்தவிர்க்கும் நடவடிக்கைகள் இந்த நாட்களில் மேற்கொள்ளப்படுவதுடன் கைதவிர்க்கப்பட்டதன் பின்னர் உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பது. | மருந்துப்பொருள் முகாமைத்துவ கட்டமைப்பின் மூலம் ஔடதங்களின் தேவைப்பாட்டினை இணங்கண்டு காலாவதி ஆவதற்கு இடமளிக்காத வகையில் மருந்து பொருட்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.6,004,076 பெறுமதியான 25 மருந்து வகைகளுக்கு உரிய 47,387 மருந்து அளவுகள் காணப்பட்ட போதிலும் கைத்தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | ஔடதங்கள் முகாமைத்துவ கட்டமைப்பினை உரிய முறையில் செயற்படுத்தாமையால் உணவட்டுன பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவின் மருந்து களஞ்சியத்தில் 2002 பெப்ரவரி 28 ஆம் திகதி காணப்பட்ட மருந்துகளிடையே 2022 அக்டோபர் முதல் 2023 செப்டம்பர் மாதம் வரையிலுமான காலப்பகுதியினுள் காலாவதி அடையவிருந்த தரம் குன்றிய 08 மருந்து வகைகளுக்கு உரிய ரூபா.2,010,887 பெறுமதியான 126,404 மருந்து அலகுகள் காணப்பட்டன. | இந்த மருந்துப் பொருள் இருப்பினை கைதவிர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | மருந்துப்பொருள் முகாமைத்துவ கட்டமைப்பின் மூலம் ஔடதங்களின் தேவைப்பாட்டினை இணங்கண்டு காலாவதி ஆவதற்கு இடமளிக்காத வகையில் மருந்து பொருட்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள் | | |
| | ---------------------------------------------- | | |
| | மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் காணப்படும் ரம்யா மொஹோட்டி மார்பு மருத்துவமனை தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கட்டம் I மற்றும் II இன் கீழ் ரூபா.90,533,375 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா.70,129,814 ஆன உடன்படிக்கை தொகைக்கு தனிப்பட்ட ஒப்பந்ததாரர்கள் இருவருக்கு 2015 நவம்பர் 06 ஆம் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான | எஞ்சிய பணிகளுக்காக மாவட்ட பொறியியலாளரிடமிருந்து ரூபா.இருபத்தொன்பது இலட்சம் பெறுமதியான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றும் தரைத் தளத்தினை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு ஒன்றினை தயாரிக்க கட்டிட பொறியியலாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளமை. | முறையான கண்காணிப்புடன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2021 அக்டோபர் 07 ஆம் திகதி அளவில் ஒப்பந்ததாரருக்கு ரூபா.39,278,021 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் நிர்மாணங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமையால் மார்பு மருத்துவமனையை வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்ல நேர்ந்துள்ளதுள்ளதுடன் கணக்காய்வு திகதியளவில் ரூபா.3,815,000 ஆன வாடகை தொகை குத்தகையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------

| | | |
|---|---|---|
| மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சொந்தமான காலி மாவட்டத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லம், விடுதி மற்றும் 166 அறைகள் காணப்படுவதுடன் அவற்றுள் 54 அறைகளில் யாரும் வதியவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் அந்த 71 மருத்துவ உத்தியோகபூர்வ இல்லங்களில் 33 மருத்துவர்களும் 16 ஏனைய உத்தியோகத்தர்களும் எஞ்சிய 22 இல்லங்களில் எவரும் வதியவில்லை என்பதும் 21 தாதியருக்கான விடுதிகளில் 10 விடுதிகளில் யாரும் வதியவில்லை என்பதும் கிராமோதய சுகாதார மத்திய நிலையங்கள் 67 இல் 48 | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்வதுடன் கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் முறையான தகவல் கட்டமைப்பு ஒன்றினை தயாரித்து அதற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உத்தியோக பூர்வ இல்லங்களில் உச்ச பயன்பாட்டினை எடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பயன்படுத்த முடியாத இல்லங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலையங்களில் மாத்திரமே வசிப்பதாகவும் வல்பல, மொரகட்டிய, அல்ல இஹல மற்றும் ஹெலகொலதெனிய ஆகிய 04 நிலையங்கள் சிதைவடைந்துள்ளமையால் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | | |

**1.5.4 தலைப்பு 307 – தென் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெலியத்த மருந்துப் பொருள் உற்பத்தி கூடம் மற்றும் ஆயுர்வேத மருத்துவமனைக்காக உலர்ந்த மற்றும் பச்சை மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் விலைக்கேள்வி கோரும்போது வருடாந்த தேவைப்பாடு தொடர்பில் கருத்திற் கொள்ளாது அளவொன்றின் விலையினை மாத்திரம் கருத்திற் கொண்டமையால் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 1.2.1(அ) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்கு உச்ச பொருளாதார நலனை பெற்றுக்கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் மேற்படி வழிகாட்டி 5.4.10(இ) மற்றும் 5.3.13(அ)(II) பிரிவின் பிரகாரம் ஒப்பந்த தொகையில் 10 சதவீதத்திற்கு குறையாத பிணையொன்று மற்றும் ஒப்பந்த தொகையில் 0.5 சதவீதம் முதல் 1 வரையான ஒரே தடவையில் செலுத்தப்படும் பணத்திற்கான பிணைவைப்பு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | வருடாந்த ஒட்டுமொத்த தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு பெறுகைகள் வழிகாட்டு கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 தலைப்பு 308 – தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணிகள் அபிவிருத்தி, மாகாண தெருக்கள் மற்றும் செய்தி அமைச்சு**

**தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டுக் குறைபாடுகள் | | |
| (i) | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா.38,510,007 கிரயமான அவசர காலங்களில் மீளாய்வு ஆண்டின் இறுதி அளவில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையினால் அந்த பாலங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதுடன் அவற்றை மீள்மதிப்பீடு செய்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பாலங்கள் 2022 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | கணக்கீட்டு நியமனத்தின் பிரகாரம் குறித்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கலகொட அஸ்போல்ட் நிலையத்தில் எஞ்சியிருந்த அஸ்போல்ட் உற்பத்தி மூலப்பொருள் இருப்பு அல்பிட்டிய பிரதேச பொறியியல் அலுவலகத்திற்கு கொண்டு செல்லும்போது 299.63 m3 காணாமல் போயிருந்தது. அது தொடர்பில் பெறுமதியினை சான்றுபடுத்தி வெளிப்படுத்துவதற்கு அல்லது சீராக்கங்களை இறுதி கணக்கில் மேற்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவதால் அது தொடர்பில் வெளிப்படுத்தல் ஒன்றையோ அல்லது சீராக்கத்தினையோ இறுதிக் கணக்கில் மேற்கொள்ளவில்லை என்பது. | நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மற்றும் சீராக்கங்களை சரியாக மேற்கொள்ள வேண்டும். |
| (iii) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மீளாய்வு ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா.508,546,192 கூட்டுத்தொகையான 12 கணகரு மீதிகள் தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்கள் மீதிகளுக்குரிய பகுப்பாய்வு அறிக்கைகள் போன்றவற்றிற்கு | எதிர்காலத்தில் இம் மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதி உறுதிப்படுத்தல்களுக்கு உரிய போதியளவான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |

சான்றுகள் முன் வைக்கப்படாமையால் கணக்காய்வில் அவற்றை திருப்திகரமாக பரிசோதிக்க முடியாதிருந்தது.

**(ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (i) <u>இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை</u> | | | | |
| II ஆம் அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | - | தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2021 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் முகாமைத்துவ உதவியாளர் (III) (தொழில்நுட்பம் அல்லாத) பதவிக்கு தற்காலிக அடிப்படையில் ஒரு வருட காலத்திற்காக உத்தியோகத்தர் ஒருவரும் 2019 நவம்பர் 15 ஆம் திகதி முதல் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு மேலும் ஒரு பெண் உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு நேர்முகப் பரீட்சைகள் சபையினால் பரிந்துரை | ஆளுநரின் கட்டளைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் சேவைக்கு ஆட்சேர்ப்புக்கும் நடைமுறைக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | | |
| (ii) | <u>பொது நிர்வாக சுற்றறிக்கை</u> | | | | |
| | • 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 06/97ஆம் இலக்க சுற்றறிக்கை | - | பதில் கடமை காலமானது 03 மாதங்கள் எனும் ஆகக் கூடிய எல்லையினைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 03 வருடங்கள் முதல் 08 பதவிகளுக்கு பதில் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் . | தற்போதைய நிலைமை ஒரு மாதத்தில் அனுப்பப்படும் என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| | • 2016 டிசம்பர் 01 ஆம் திகதிய 28/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 பந்தி | - | குறித்த சேவையின் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவி ல்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2015 மே 25 ஆம் திகதிய PED 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 284,589 | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் பொது முகாமையாளருக்கு சுற்றறிக்கையின் மூலம் முறையே மாதம் ஒன்றுக்கு 170 லிட்டர் டீசல் மற்றும் 150 லிட்டர் டீசல் மாத்திரம் உரித்துடைய | மேலதிக எரிபொருள் தேவைப்பாடு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டு ள்ளமை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போதிலும் அந்த எரிபொருள் எல்லையினை விஞ்சி தலைவரினால் மீளாய்வு ஆண்டில் 1,722 லிட்டர்களும் பொது முகாமையாளரினால் 1,414 லிட்டர்களும் பயன்படுத்தப்பட்டிருந்த துடன் அதற்காக முறையே ரூபா.179,111 மற்றும் ரூபா.105,478 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந் தது. | |
| (இ) | கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் | | |
| (i) | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2017 ஆம் ஆண்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஆண்டின் உள்ளேயே நிறைவு செய்யப்பட வேண்டிய ரூபா.60,020,114 ஒப்பந்த பெறுமதியுடைய 06 செயற்திட்டங்களில் பணிகள் நிறைவு செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது. | நிர்மாணப் பணிகளின் கண்காணிப்புக் நிறுவனத்தை தெரிவு செய்ததில் தாமதம் ஏற்பட்டுள்ளமை. | குறித்த செயல் திட்டத்தினை தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு அல்லது ஒப்பந்ததாரர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் பாதிப்பிற்குள்ளான வீதிகளை புனரமைப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் மாகந்துர பிரதேச பொறியியல் அலுவலகம் ஆரம்பித்திருந்த 13 செயற்திட்டங்கள் பூர்த்திக் காலம் நிறைவடைந்து 02 இற்கும் 03 இற்கும் இடைப்பட்ட வருடகாலம் கடந்திருந்த போதிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | குறித்த காலப்பகுதியினுள் பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்<br>---------------------------------------------------<br>கலகொட முன்பூர்த்தி நிலையத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் 2018 ஜுலை 09 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் தார் கலவை உற்பத்தி இயந்திரம் 2021 மார்ச் மாதம் ஏலமிடப்பட்டு இருந்தது. எனினும் முன் பூர்த்தி உற்பத்திக்காக ஈடுபடுத்தும் நோக்கில் நிலையத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் பயன்படுத்தப்படாத ரூபா 2,383,692 பெறுமதியான 931.13 கன மீட்டர்கள் வீதிக்கான தார் கலலை நிலையத்தினுள் எஞ்சி இருந்த போதிலும் அவற்றை கைதவிர்ப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்நிலை ஏற்படாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்து உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டமை. | உரிய பொருட்களின் உச்சப் பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது வழங்குநருக்கு மீண்டும் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.6 தலைப்பு 309 – தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்<br>---------------------------------------------------<br>அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்தினால் L/2940 ஆம் இலக்க நீண்டகால குத்தகை உடன்படிக்கையின் கீழ் 1965 ஆம் ஆண்டு முதல் 1995 ஜனவரி 11 ஆம் திகதி வரையிலும் அக்குரஸ்ஸ கூட்டுறவு சங்கத்திற்கு அரசின் காணி ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 1995 ஆம் ஆண்டின் பின்னர் கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 09 ஆம் திகதி வரையிலும் அதாவது 26 வருடங்கள் வரையிலான நீண்ட கால குத்தகை உடன்படிக்கை ஒன்று இல்லாது குத்தகை வாடகை செலுத்தப்படாது தொடர்ந்தும் அத்துமீறிய முறையில் காணி பயன்படுத்தப்படுவதாகவும் 1995 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலும் அறவிடப்பட வேண்டிய நீண்டகால குத்தகை வாடகையின் | குத்தகை பணிகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் உரித்தினை மீளப் பெற்றுக்கொள்ளும் அதிகார சட்டத்தின் கீழ் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளமை. | நீண்டகால குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் அரசின் காணிகள் தொடர்பான செயல் வழி கோவையில் ஏற்பாடுகளுக்கு அமையவும் செயற்பட வேண்டும். |

கூட்டுத் தொகை ரூபா 5,230,000 மற்றும் 2010 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலுமான புதிய மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட குத்தகை வாடகை ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.
அவ்வாறே அரச காணிகள் தொடர்பான செயல்வழி கோவையின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 454 அதிகாரத்தின் 229 ஆம் கட்டளையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாக்கப்பட்ட காணிகளில் எவரேனும் குடியேறுதல் தடுக்கப்பட வேண்டியதுடன் கூட்டுறவு சங்கத்தினால் நில்வல கங்கை பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் முதலாவது தளத்தின் கொங்கிறீற் தட்டு (Slab) இடுதல் வரையிலுமான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள கட்டிடமொன்று அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ளமை தொடர்பில் 1979 இன் 07 ஆம் இலக்க உரித்தினை மீளப் பெற்றுக் கொள்ளும் அதிகாரத்தின் பிரகாரம் அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.7 தலைப்பு 310 – தென் மாகாண கல்வி திணைக்களம்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (i) <u>தென் மாகாண சபை நிதி விதிக்கோவை</u> | | | | |
| விதி 54.5 | - | அழிவுகள் மற்றும் நட்டங்கள் தொடர்பில் பொறுப்புக் கூற | இது தொடர்பில் ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| வேண்டியவர்களை திட்டவட்டமாக நிர்ணயிப்பதற்காக முழுமையான அறிக்கை ஒன்றை அனுப்புவதற்கு 7 நாட்களை விட அதிக காலம் கடந்தால் ஆரம்ப அறிக்கை ஒன்றினை அனுப்பி 03 மாதங்களில் முழுமையான அறிக்கையினை அனுப்பவேண்டிய போதிலும் கலேகாண முறையற்ற கல்வி வழங்கல் மத்திய நிலையத்தில் காணப்பட்ட 06 கணினி இயந்திரங்கள், 06-UPS மற்றும் 06 Keyboard திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டு 2021 டிசம்பர் 10 ஆம் திகதிய கணக்காய்வு திகதிக்கு 02 வருடங்களும் 02 மாதங்களும் கடந்து இருந்த போதிலும் தென் மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஆரம்ப அறிக்கையொன்றோ முழுமையான அறிக்கை ஒன்றோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | என்பது. | வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 2011 நவம்பர் 24 ஆம் திகதி 08/2011 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | 413,747 | தென் மாகாண கல்வித் திணைக்களத்தில் 87 பராயம் அடையாதோர் கணக்குகள் தொடர்பில் தகவல்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய பராயம் அடையாதோர் குறித்த வயதினை நிறைவு செய்து 01 முதல் 55 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் வைப்பு கணக்குகளில் உள்ள பணத்தை உரிமையாளர்களுக்கு செலுத்துவதற்கு உரிய அங்கீகாரத்தை பெற்று பணத்தை விடுவிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த முகவரிகளுக்கு கடிதங்கள்அனுப்பப்பட்டுள்ளது. மேலும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் தகவல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. மீண்டும் ஓய்வூதிய திணைக்களத்திற்கு தகவல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) அதிகாரமற்ற கொடுப்பனவுகள்**

---

| | | |
|---|---|---|
| கலேகாண முறையற்ற கல்வி வழங்கல் நிலையத்தின் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 வருடங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியமையால் ரூபா 5,154,700 ஆன வருமானம் ஒன்று ஈட்டப்பட்டு இருந்ததுடன் தென் மாகாண சபை நிதி விதி 39 இன் பிரகாரம் மாகாண சபையின் வருமானமாக கணக்கு வைக்கப்படாது பொது வைப்பு | 2019 ஜூலை 15 ஆம் திகதி முதல் பணம் நடமுறைக்காக முறையான சட்டகம் ஒன்று தயாரிக்கப்பட்டதாகவும் அதற்கு முன்னர் பணத்தை அறவிடுதற்கு முறையான சட்டகம் ஒன்று தயாரிக்கப்படவில்லை | தென்மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு அவற்றுள் ரூபா 2,197,214 தொகை சட்டரீதியற்ற முறையில் செலவிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஈட்டப்பட்ட வருமானங்கள் தொடர்பான நிலைய விபரங்கள் நிலையத்தில் காணப்படவில்லை. 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பொது வைப்பு கணக்கில் ரூபா 2,957,486 நிலவியது. | என்பது. | |
| **(இ)** | **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**<br>------------------------------------------------------------ | | |
| | 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் பாடசாலை வாயிற்காப்பேரன் மற்றும் இரசாயன ஆய்வுகூட ஊழியர்களை இணைத்துக் கொள்ளும்போது பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 பின்னிணைப்பு II இன் அடிக்குறிப்பின் பிரகாரம் PL-I இற்கு சம்பள அளவு திட்டத்தில் ஆரம்ப படிமுறையான ரூபா.11,730 ஆன சம்பளத்துக்கு பதிலாக PL-I சம்பள படிமுறையின் II தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு அந்த சம்பள அளவு திட்டத்தின் 12 ஆவது படிமுறையில் வைத்து சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. தெரிவு கணக்காய்வு பரிசோதனையில் காலி, அல்பிட்டிய, உடுகம மற்றும் மாத்தறை வளையங்களில் 88 அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டு கூடுதலான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் செயலாளரின் மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களை உரிய சம்பள படிநிலைகளில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 2016 பிப்ரவரி மாதம் முதல் 60 தவணைகளில் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்கமைய தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | | |
|---|---|---|
| அம்பலாங்கொடை மற்றும் காலி கல்வி வலயங்களில் பாடசாலை கட்டிடங்களை உரிய முறையில் கண்காணித்து பராமரிக்காத காரணத்தால் முறையே 04 பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் 04 கட்டடங்களை உடைத்து அகற்றுவதற்கு கட்டிட பொறியியலாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு இருந்ததுடன் மேற்படி வலயங்களில் மேலும் 09 பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் 12 என்னும் படியாக அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலைமையில் காணப்பட்டன. கா/பாருலிய ஜீன ரத்தன மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த 100 x 25 அளவிலான கட்டிடம் 2004 சுனாமி பேரிடரின் பின்னர் நிர்மாணிக்கப்பட்டு இருந்தபோதிலும் நலிவான நிர்மாணம் காரணமாக சுமார் 16 வருட காலத்தில் உடைத்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அக் கட்டிடங்களை உடைத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கான செலவினத்தை மேற்கொள்வதற்கு பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் கணக்குகளில் போதிய பணம் இல்லாதிருந்தமை, தெற்கு கடற்படை நிறைவேற்று மத்திய நிலையத்தில் இணங்கி இருந்தபோதிலும் அப்பணிகள் மேற்கொள்ளப்படாமை ஆகியவற்றின் அடிப்படையில் மீண்டும் ஹிக்கடுவ மற்றும் ரத்கம பிரதேச சபைகளிடமும் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | அபாயமான கட்டிடங்களை உடைத்து அகற்றுவதற்கு துரித நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டியமை. |

**(உ) வெளிப்படையான மோசடிகள்**

| | | |
|---|---|---|
| தென் மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய 0.5535 ஹெக்டேயர் பரப்பளவான கலேகான வள நிலையத்தின் வளாகத்தில் 0.4654 ஹெக்டேயர்கள் பரப்பளவானது வள நிலையத்திற்கு சொந்தமாக காணப்படுவதுடன் 0.0681 ஹக்டேயர்கள் பரப்பளவான காணி 12 அத்துமீறிய குடியிருப்பாளர்களிகால் கைப்பற்றப்பட்டு மதில் சுவர்கள் மற்றும் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு இருந்தபோதிலும் அக்காணியை சுவீகரிப்பதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காலி நகர ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை. | அத்துமீறிய குடியிருப்பாளர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஊ) ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| | | |
|---|---|---|
| அம்பலாங்கொடை கல்வி வலயத்தின் அண்மிய பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016 நிறைவு செய்யப்படவேண்டிய ரூபா 5,397,602 | 02 செயற்திட்டங்களின் பணிகளுக்காக மேலதிக காலத்தை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. மேலும் | செயற்திட்டங்களின் தாமதங்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான நிர்மாணங்கள் மற்றும் 03 பழுதுபார்த்தல் செயற்திட்டங்கள் ஆகியவற்றின் பணிகளில் ரூபா.3,495,250 ஆன பணியின் பகுதி மாத்திரம் நிறைவு செய்யப்பட்டு கைவிடப்பட்டிருந்தது. அந்த நிரமாணங்களின் இரும்புகள் துருப்பிடித்லுக்கு உள்ளாகி கட்டிடங்கள் இற்றுப்போனவாறு காணப்பட்டது. | ஒரு செயற்திட்டத்தின் பணிகளை மேற்கொள்வதற்கு புதிய மதிப்பீடு ஒன்றினை வழங்குமாறு அல்லாதுவிடின் உடன்படிக்கையினை ரத்து செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. | துரிதமாக செயற்திட்டத்தினை நிறைவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | தொடங்குவ கா/ரோஹண மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடம் 2016 ஆம் ஆண்டு திறக்கப்பட்டிருந்த போதிலும் ஆய்வுக்கூட கட்டிடத்திற்கு தேவையான ஆய்வுக்கூட உபகரணங்களை வழங்காமையால் ஆய்வுகூட கட்டிடம் செயல் இழந்து காணப்பட்டது. | தேவையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குமாறு வரிசை அமைச்சிற்கு 02 சந்தர்ப்பங்களில் அறிவித்திருந்த போதிலும் பொருட்கள் இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. அதனால் அந்த வளாகம் வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றமை. | வளங்களில் இருந்து உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.8 தலைப்பு 311 – தென் மாகாண மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல், கிராமியக் கைத்தொழில், மின்சாரம் மற்றும் கிராமிய தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**<br>தென்மாகாண கடற்றொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இலத்திரனியல் கழிவுகளை மீள் சுழற்சி உட்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வு ஆண்டில் சேகரிக்கப்பட்ட இலத்திரனியல் கழிவுகளுக்காக ரூபா.3,564,365 ஆன தொகை தனியார் கம்பெனிகள் இரண்டிற்கு செலுத்தப்பட்டு இருந்த போதிலும் அந்த கழிவுகள் சேகரிக்கப்பட்ட விதம், வழங்கியவர்களின் பெயர்கள், வழங்கிய அளவுகள் மற்றும் கைதவிர்ப்பதற்காக தனியார் கம்பெனிகளுக்கு வழங்கிய அளவு தொடர்பிலான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015/2016 கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேச சபைகளின் மூலம் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் அதற்கமைய சேகரிக்கப்பட்ட கழிவு சுற்றாடல் அமைச்சுக்கு வழங்கப்பட்டதாகவும் அதிக அளவில் ஒதுக்கப்படாது காணப்பட்டமையால் அவற்றின் அளவுகள் தொடர்பான தகவல்கள் அமைச்சிடம் காணப்படவில்லை என்பது. | பெறுகைகள் வழிகாட்டி கோவைக்கு இணங்க செயற்பட்டு அதற்குரிய தகவல்களை சரியாக பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.9 தலைப்பு – 313 தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்** | | |
| புடவை மற்றும் சிறுகைத்தொழில் முற்பண கணக்கின் (விடய இலக்கம் 31302) அதிகாரம் வழங்கப்பட்ட செலவினத்தின் உச்ச எல்லை ரூபா.260,000,000 ஆனபோதிலும் செலவினத்தில் உண்மையான பெறுமதி ரூபா.294,732,883 ஆனமையால் செலவினத்தின் உச்ச எல்லை ரூபா.34,732,883 இனால் விஞ்சப்பட்டிருந்தது. | கணக்காய்வின் அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். எல்லைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் அமைச்சு/திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | எல்லைகளை விஞ்சுவதற்கு முன்னர் அவசியமான திருத்தங்களை மேற்கொண்டு உரிய அதிகாரத்துடன் செலவினங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். |

### 1.5.10 தலைப்பு 315 – தென் மாகாண விவசாயத் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | **போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்** | | |
| (i) | லபுதுவ பண்ணை முற்பணக் கணக்கின் (விடய இலக்கம் 31503) அதிகாரமளிக்கப்பட்ட வரவு மீதியின் உச்ச எல்லை ரூபா 28,000,000 ஆன போதிலும், வரவு மீதியின் உள்ளபடியான பெறுமதி ரூபா 50,558,433 ஆனமையால் வரவு மீதியின் உச்ச எல்லை ரூபா 22,558,433 இனை விஞ்சியிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். வரம்பு மீறப்பட்ட அமைச்சு/ திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படும். | வரம்புகளை மீறுவதற்கு முன் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் மற்றும் உரிய அதிகாரத்துடன் செலவினங்களைச் செய்ய வேண்டும். |
| (ii) | அம்பாந்தோட்டை ருஹுணு ரசார விற்பனை நிலைய முற்பணக் கணக்கின் (விடய இலக்கம் 31506) அதிகாரம் அளிக்கப்படும் வரவு மீதியின் உச்ச எல்லையானது ரூபா.900,000 ஆனபோதிலும் வரவு மீதியின் உள்ளபடியான பெறுமதி ரூபா.1,431,317 ஆனமையால் வரவு வீதியின் உச்ச எல்லை ரூபா.531,317 இனால் விஞ்சி மீறப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். வரம்பு மீறப்பட்ட அமைச்சு/ திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படும். | வரம்புகளை மீறுவதற்கு முன் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் மற்றும் உரிய அதிகாரத்துடன் செலவினங்களைச் செய்ய வேண்டும். |

(ஆ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| தென் மாகாண விவசாய திணைக்களத்திற்கு சொந்தமான தரிச்சவில மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ரூபா.1,314,300 பெறுமதியான உலர்த்தும் இயந்திரம், கை உழவு இயந்திரம், 08 CCTV கமராக்கள், வெள்ளை தேங்காய் எண்ணெய் இயந்திரம் மற்றும் தேங்காய் அரைக்கும் இயந்திரம் ஆகியன 2021 டிசம்பர் 31 கணக்காய்வு திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | CCTV கமரா பழுது பார்ப்பதற்கு போதிய நிதி ஏற்பாடு இல்லாதிருப்பதாகவும் வெள்ளை தேங்காய் எண்ணை இயந்திரத்தினை பரிசோதித்து அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் தேங்காய் அரைக்கும் இயந்திரத்திற்கு உரிய தொழில்நுட்ப உதவியினை துரிதமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உபகரணங்களை கொள்வனவு செய்யும்போது தேவை தொடர்பில் சரியாக இனம் கண்டு கொள்வனவு செய்ய வேண்டும். அவ்வாறே விலைவற்ற சொத்துக்களை துரிதமாக ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.11 தலைப்பு 317 – தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ செயற்திறனின்மைகள் | | |
| (i) | 2012 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா.14,328,127 கூட்டுத் தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள், உரிய சங்கங்களில் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்படாத நீதிமன்ற தண்டப்பணங்களை தீர்ப்பனவு செய்யும் வரையிலும் நிதியத்தில் பேணுவதற்கு மற்றும் இனங்காணப்பட்ட தரப்பினர்கள் தொடர்பில் தகவல்களை சமர்ப்பித்த போது உரிய பணத்தை விடுவிப்பதற்கும் நிதியத்தின் முகாமைத்துவ குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை. | நீதிமன்ற தண்டப்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு துரித நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக கூட்டுறவு சங்கங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய திறைசேரி நிதிய கடன் மீதியான ரூபா.30,808,369 இற்கான வட்டித் தொகை ரூபா.14,696,666 ஆக காணப்பட்டதுடன் இந்த கடன் மற்றும் வட்டி மீதிகள் 2006 ஆம் | இந்த கடன் தொடர்பில் உடன்படிக்கை மற்றும் சட்ட பதிவேடுகளை சமர்ப்பிக்குமாறு 2014 ஆம் ஆண்டு முதல் கோரப்பட்ட போதிலும் தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது | பின்தொடர்தல் நடவடிக்கை கால ரீதியாகவும் முறையான கண்காணிப்புடனும் மேற்கொள்ளப்பட்டு அறவிடப்பட வேண்டிய கடன்மீதிகளை அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு முதல் முன் கொண்டுவரப்பட்ட போதிலும் உரிய சங்கங்களில் இருந்து அறவிடுவதற்கோ அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | 1994 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 18 கூட்டுறவு சங்கங்களுக்காக பல்வேறு பணிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.45,418,396 கூட்டுத் தொகையான கடன் தொகையில் 2021 நவம்பர் 30 ஆம் திகதி அளவிலும் ரூபா.23,695,696 தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | ஆளுநருடன் கலந்துரையாடி வட்டி நிவாரணங்களை வழங்கி அறவிடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளவாறு உள்ளதுடன் அவ்வாறு அல்லாது விடின் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பின்தொடர்தல் நடைமுறை கால அடிப்படையலும் உரிய கண்காணிப்புடனும் மேற்கொள்ளப்பட்டு அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அளவிடுவதற்கோ அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | 2021 ஆம் ஆண்டின் போது கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியத்தின் மதியுரை செயற்குழுவின் தலைவர் உள்ளடங்களாக 06 அங்கத்தவர்களுக்கு ஓய்வூதிய நிதியத்தில் இருந்து படிகளாக செலுத்தும் இயலுமை ஒன்று காணப்படாத போது ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா.326,000 ஆன தொகை பதவியணியின் 08 உத்தியோகத்தர்களுக்காக ரூபா.878,139 தொகையுமாக ரூபா.1,204,139 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கட்டளை கோவையின் பிரகாரம் நிதி ஏற்பாடு மேற்கொள்ள நேரிடாத போதிலும் கட்டளை கோவையின் 27 பிரிவின் மற்றும் 2020.10.27 ஆம் திகதிய ஆளுநரின் கடிதத்தின் மூலம் மதியுரை செயற்குழு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியத்தின் கட்டளை கோவைக்கு அமைய செயற்படவேண்டும். |

(ஆ) தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | தென் மாகாண கூட்டுறவு திணைக்களத்தினால் 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் முன்னர் இருந்து கூட்டுறவு நம்பிக்கை பொறுப்பு நிதியம் எனும் பெயரில் பேணிச் செல்லப்பட்டிருந்த மிகை நிதியத்தின் ஊடாக 07 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.6,383,765 | உடன்படிக்கை காலத்தினுள் அறவிடப்பட்டிராத மற்றும் அதற்கு உரிய நடவடிக்கை அக்காலப் பகுதியில் எடுக்கப்பட்டிராமையால் அறவிடுதல் சிரமமானது ஆகும். மீண்டும் உடன்படிக்கை கைச்சாத்திட்டு | நிலுவை கடன் மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன கடன் மீதியினை அறவிடுவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் ஒரு சங்கம் நீங்கலாக ஏனைய 06 சங்கங்களில் கடன் மீதிகள் 2005 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்பட்ட போதிலும் அக்கடன் மீதிகளை அளவிடுவதற்கோ அல்லது அதற்குரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ii) | மாத்தறை மாவட்டத்தின் நீதிமன்ற தண்டப்பணத்தின் மூலம் அறவிடப்பட்டு அனுப்பப்படும் பணம் உரிய கூட்டுறவுச் சங்கத்தினை இனங்கண்டு தாமதிக்காது சங்கங்களுக்கு வழங்கப்படவேண்டிய போதிலும் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இனம் காணப்படாத ரூபா.899,761 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் அவ்வாறு இனம் காணப்படாத ரூபா.2,175,665 ஆன மீதி ஒன்று கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் காணப்பட்டது. | இனம் காண முடியாத நீதிமன்ற தண்டப் பணங்களை இனம் காணுவதற்கு உரிய தகவல்கள் நீதவான் நீதிமன்றத்தில் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் மூலம் இனங்காணப்பட்டு உடனடியாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உரிய சங்கங்களை இனம்கண்டு தீர்ப்பனவு செய்யப்படாத நீதிமன்ற தண்டப்பணங்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.12 தலைப்பு 318 – தென் மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி, கலாச்சார மற்றும் கலை அலுவலகள், சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள், மகளிர் விவகார மற்றும் மனைப் பொருளாதார மேம்படுத்தல், வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் ஆளணி மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| | முகாமைத்துவ செயற்திறனின்மைகள் | | |
| (அ) | அரச நிதியினை சிக்கனமாக பயன்படுத்தும் தேவை அரசாங்கத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ள போது அர்த்தமுள்ள பாடல்கள் தொடர்பில் மக்களிடையே ஈர்ப்பொன்றினை ஏற்படுத்தும் நோக்கில் மத, இலக்கிய மற்றும் கலை அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பத்தாயிரம் | பாடல் இறுவட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடல்கள் தக்ஷினபாய வளாகத்தில் காலை நேரங்களில் ஒளிபரப்புவதன் மூலம் பாடல்களுக்கு பிரபல்யத்தை பெற்றுக்கொள்ளல், றுஹுணு சேவையின் ஊடாக | அரசின் நிதியினை ஆக்கபூர்வமான செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாடல்களை கொண்ட பாடல் இறுவட்டொன்று தயாரிப்பதற்காக மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் ரூபா.1,427,500 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந் தது. செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் 2020 ஒக்டோபர் மாதம் பாடல் இறுவட்டு வெளியிடப்படவிருந்த போதிலும் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த பாடலின் இறுவட்டினை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாடல்களை ஒளிபரப்பும் எதிர்பார்ப்பு உள்ளதாக தென் மாகாண அரச சங்கீத குழுவின் பங்குபற்றலுடனான விழாவொன்றின் போது இந்த பாடல்களை பாடுவதன் மூலம் அந்த பாடல்களை மக்களிடையே கொண்டு செல்ல எதிர்பார்த்துள்ளனமை. | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான 1999 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் கிராம அபிவிருத்தி நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளில் கடன் மற்றும் வட்டியாக ரூபா.16,011,413 ஆன நிலுவை மீதி ஒன்று அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | தொடர்ந்தும் 1999 - 2019 ஆண்டுகளுக்குரிய கடன் மற்றும் வட்டி ரூபா.16,011,413 நிலவுகின்றமை. | நிலுவைக்கடன் பணத்தை துரிதமாக விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.13 தலைப்பு 320 – தென் மாகாண தலைமைச் செயலகம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கணக்குகள் | | |
| | மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் மீதி ரூபா.1,334,237,399 தொகை நடைமுறை சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த, பணி நீக்கத்திற்கு உள்ளான மற்றும் சேவையை விட்டுச் சென்ற 4,479 உத்தியோகத்தர்களிடமிருந்து தொடர்ந்தும் அறவிட படவேண்டிய ரூபா.96,390,494 கூட்டுத் தொகையான அறவிடப்படாத கடன் மீதி உள்ளடங்கி இருந்தது. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன்.இந்த கடன் மீதியினை தீர்ப்பானவு செய்யும் நடவடிக்கைகள் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமை. | இந்த கடன் மீதிகளை தீர்ப்னவு செய்யும் பணிகளை நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | |
|---|---|---|
| தென் மாகாண சபையினால் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்கள் 49 இற்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள படியாக செலுத்த வேண்டிய முத்திரை கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ஆகியவற்றின் பெறுமதி ரூபா.237,281,085 ஆன போதிலும் முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களில் உரிய வருமானம் காசு புத்தகத்தின் பிரகாரம் நிலவிய காசு மீதி ரூபா.13,106,654 ஆகும். அதற்கமைய முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்றப் தண்டப்பணம் ஆகியவற்றினை செலுத்துவதற்கு போதிய தொகை பணம் காசு புத்தகத்தில் இல்லை என்பதும் முத்திரை கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப் பணத்திற்காக கிடைத்த பணம் வேறு பணிகளுக்கு செலவிடபட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. | முத்திரை கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ஆகியவற்றுக்கு தனியானதொரு காசு புத்தகத்தொன்றினை பேணுவது உள்ளக கட்டுப்பாட்டிற்காகவே ஆகும். முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களுக்கு உரிய அனைத்து பணமும் அதில் காண்பிக்கப்படுவதில்லை என்பது. | முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணத்திற்காக பேணப்படும் காசு புத்தகத்தினுள் முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களுக்குரிய அனைத்து தொகைகளும் உள்ளடக்கப்பட வேண்டும். |

(இ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | | |
|---|---|---|
| மாகாண அரச உத்தியோகத்தர்கள் முற்பணக்கணக்குகள் 21 இற்குரிய செலவினத்தின் உச்ச எல்லை மீறப்பட்டிருந்த 10 சந்தர்ப்பங்கள், வரவு மீதியின் உச்ச எல்லை மீறப்பட்டிருந்த 06 சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லை அடையப்பட்டிராத 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கிற்காக உரிய எல்லைகளின் பிரகாரம் செயற்படல் அந்த அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவேண்டும். எல்லை மீறல்கள் மற்றும் எல்லைகளை அடையாமை தொடர்பில் உரிய நிறுவனத்திற்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கப்பட்டமை. | விதிக்கப்பட்ட எல்லைகளினுள் செயற்படுவதற்கு அல்லது எல்லைகளை விஞ்ச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் உரிய எல்லைகளை திருத்த வேண்டும். |

(ஈ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

தென் மாகாண சபைக்காக தபால் முகாமைத்துவ தகவல் கட்டமைப்பொன்றினை தயாரித்தல்

-------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| தென் மாகாணத்தின் அனைத்து அரச நிறுவனங்களையும் ஒன்றிணைத்து தபால் முகாமைத்துவ கணினி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக 2020 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி ரூபா.14,008,176 ஆன தொகை ஒப்பந்த கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்கமைய இச்செயற்த்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா.27,984,663 ஆன தொகையை செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2020 ஒக்டோபர் 07 ஆம் திகதி முதல் 03 மாதங்களினுள் 03 கட்டங்களில் நிறுவுவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும் 2022 ஜுன் மாதம் வரையிலும் கட்டமைப்பின் முதலாவது கட்டத்தின் பணிகள் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டவாறு காணப்பட்டதுடன் அந்தந்த கட்டங்களுக்கு உரிய வெற்றியின் அடிப்படையில் அதற்கு அடுத்த கட்டத்தினை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்திருந்த போதிலும் அந்த மூன்று கட்டங்களுக்கும் தேவையான 86 ஸ்கேனர் இயந்திரங்கள் ரூபா.21,140,000 ஆன தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு 16 ஸ்கேனர் இயந்திரங்கள் மாத்திரம் கட்டமைப்பினை தாபிக்கும் நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு ரூபா.14,700,000 பெறுமதியான 70 ஸ்கேனர் இயந்திரங்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய செயற்த்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் விலைவற்றதாகி இருந்தது. | இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பதற்கு அடிப்படையாக அமைந்தது கடதாசியினை பயன்படுத்தாத (Paper Less) அரச சேவை ஒன்றினை ஏற்படுத்துவதே என்பதுடன் இது கௌரவ ஆளுநரின் எண்ணத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் பெறுகைகளின் ஊடாக ஒரே தடவையில் கொள்வனவு செய்யும்போது நலனினை பெற்றுக் கொள்ளும் நோக்கில் செயற்பட்டுள்ளமை. | இது தொடர்பில் கற்கை ஒன்றினை மேற்கொண்டு எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(உ) இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | | |
|---|---|---|
| தென் மாகாண சபையின் அமைச்சு / திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு உரிய தீர்க்கப்படாது காணப்படும் 24 சந்தர்ப்பங்களுக்கு உரிய ரூபா.21,747,894 தொகையான வாகன விபத்துக்கள் தொடர்பிலான நட்டங்கள் மற்றும் 54 சந்தர்ப்பங்கனுக்குரிய ரூபா.6,725,303 தொகையான ஆதன நட்டங்கள் எனுமாறு ரூபா.28,473,197 கூட்டுத் தொகையான நட்டங்கள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பில் தொடர்ச்சியாக கலந்துரையாடி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | தென்மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.14 தலைப்பு 322 – தென் மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகம்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| (அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள் | | |
| பிரதி தலைமை செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தின் வழங்கல் பிரிவின் நிர்மாண பொறியியலாளர் பதவியில் சேவையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2020 செப்டம்பர் 04 ஆம் திகதிய தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கடிதத்தின் பிரகாரம் 2020 செப்டம்பர் மாதம் 04 ஆம் திகதி முதல் வாரம் ஒன்றுக்கு 02 நாட்கள் அதாவது செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய நாட்களில் காலி மாநகர சபையின் நகர பொறியியலாளர் பதவியில் பதிற்கடமை ஆற்றுவதற்காக நிரந்தர பதவிக்கு மேலதிகமாக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த உத்தியோகத்தர் தமது விருப்பின் அடிப்படையில் 2021 பெப்ரவரி மாதம் முதல் 2022 மார்ச் மாதம் வரையிலும் முழு நேர அடிப்படையில் பதில் கடமை பதவியில் கடமையாற்றியிருந்தார். | மேற்படி பொறியியலாளர் நிரந்தரமாக 2022 மார்ச் மாதம் முதல் காலி மாநகர சபையின் நகர பொறியியலாளர் பதவியில் நியமிக்கப்பட்டு பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) இற்கு பிரதியுடனான தென் மாகாண பிரதம செயலாளரினால் குறித்த உத்தியோகத்தருக்கு கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளமை. | குறித்த உத்தியோகத்தர் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஆ) ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | வந்துரம்ப மத்திய மகா வித்தியாலயத்தின் வாசிகசாலையுடனான தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வு கூடத்தனை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரருடன் ரூபா.17,057,534 ஆன உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டு 2021 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் ரூபா.11,579,747 செலுத்தப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 05 ஆம் திகதி நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்த போதிலும் ஒப்பந்த கம்பெனியினால் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. முற்பணத்துக்கான பிணை 2019 மார்ச் 19 ஆம் திகதி காலாவதியடைந்திருந்த போதிலும் அதன் காலத்தை நீடிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய ரூபா.1,103,874 தொகையான முற்பணத்தை அறவிட முடியாதிருந்தது. முதலாவது தளத்திற்காக கொங்கிரீட் தட்டில் இளையப்பட்டிருந்த குழாய் கட்டமைப்பில் கொங்கிரீட் உட்புகுந்து பயன்படுத்த முடியாது போனமை, மின்சார இணைப்பிற்காக உரிய இடங்களை வைக்காது சுவர்களுக்கு சீமெந்து பூச்சு பூசப்படாது சுவர்களின் மேல் கேசிங் பொருத்துதல் மற்றும் அலுமினியம் ஜன்னல் பட்டங்களை பொருத்தியிருந்தமை மற்றும் கூரைக்கு பயன்படுத்தப்படும் காப்புகளில் உரியமுறையில் பூச்சு பூசப்படாமை ஆகிய குறைபாடுகள் காணப்பட்டன. | மாவட்ட பொறியியலாளரின் ஆலோசனை இன்றி கேவிங் இடப்பட்டு மின்சார இணைப்பு வழங்கப்பட்டமையால் மின்சார கம்பிகளை இழுப்பதற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. இந்த குறைபாடு உள்ளடங்களாக மேலும் சில குறைபாடுகளை அவதானித்து திருத்தி அமைப்பதற்கு ஒப்பந்ததாரருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட்டு உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கா/கிறிஸ்து தேவ மகளிர் பாடசாலையின் கணனி ஆய்வுகூடம் மற்றும் வாசிகசாலையுடனான 90′X25′ பரப்பளவான இரண்டு மாடி வகுப்பறை கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக 2017 மே 02 ஆம் திகதி ஒப்பந்ததாரருடன் ரூபா.19,793,490 ஆன உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ரூபா.8,333,110 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2018 மே | தென் மாகாண கல்விப் பணிப்பாளரினால் இது தொடர்பில் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தத்தினை நிறைவு செய்து எஞ்சிய பணிகளை மற்றுமொரு ஒப்பந்ததாரரை கொண்டு நிறைவேற்றுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை. | அறவிடப்பட வேண்டிய முற்பணத்தொகையை துரிதமாக அறவிட வேண்டியதுடன் உடன்படிக்கையை ரத்து செய்து குறித்த ஒப்பந்ததாரரை கறுப்பு பட்டியலில் உள்ளடக்குவதற்கு மற்றும் எஞ்சிய பணிகளை மற்றுமொரு |

| | | |
|---|---|---|
| 01 ஆம் திகதியில் ஒப்பந்தத்தின் செல்லுபடியான காலம் நிறைவடைந்திருந்தது.நிர்மாணப்பணிகளை நிறுத்துவதற்காக நிர்மாணங்களின் நியமமான நலிவான மட்டத்தில் காணப்பட்டமை காரணமாக 2019 செப்டம்பர் 11 ஆம் திகதி உடன்படிக்கையை ரத்து செய்வதற்கு மாவட்ட பொறியியலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.<br>ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.5,695,647 ஆன தொழில் ஆரம்பிப்பு முற்பணத்தொகையில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா.4,426,435 ஆன போதிலும் ஒப்பந்தத்தினை துரிதமாக நிறைவு செய்து அப்பணத்தை அறவிடுவதற்கோ அல்லது குறித்த வங்கி பிணைமுறி காலத்தினை நீடிப்பு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>உடன்படிக்கையின் பிரகாரம் தொடர்ந்தும் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.17,652,447 ஆன போதிலும் ஒப்பந்ததாரர் கட்டுமானத்தை கைவிடப்பட்டிருந்தமையால் எஞ்சிய பணிகளை மற்றுமொரு ஒப்பந்ததாரரின் மூலம் நிறைவேற்றுவதற்கு ரூபா.29,109,837 ஆன மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ஒப்பந்த நிர்வாகத்தின் தோல்வியின் அடிப்படையில் அரசுக்கு ரூபா.11,457,390 ஆன மேலதிக பணத்தை செலவிட நேர்ந்திருந்தது. | | ஒப்பந்ததாரர் ஊடாக துரிதமாக நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.15 தலைப்பு 324 – தென் மாகாண வருமானத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) நிலுவை வருமானம் | | |
| காணிகளை சாட்டுதலின் அடிப்படையில் அறவிடப்படும் முத்திரை கட்டணங்களுக்கு உரிய காணிகளை மீள் மதிப்பீடு செய்து வழங்கப்படும் அபிப்பிராயக் கூற்றின் | நிலுவை வருமானங்கள் (முத்திரை கட்டணங்களுக்கு உரியதாக) எதிர்வரும் வருடங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய வருமானங்களை கால அடிப்படையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் 9581 கடன்பட்டோர் இணங்கிய நிலுவை முத்திரை கட்டண வருமானம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா.436,862,186 என்பது அவதானிக்கப்பட்டது. மாகாண நிதி விதி 116.1 இன் பிரகாரம் சட்டத்தின் ஊடாக நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது அளவிடமுடியாததாயின் கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. | என்பது. | வேண்டும். |
| (ஆ) | தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்<br>----------------------------------------- | | |
| | தென் மாகாண வருமான திணைக்களத்தின் காலி மாவட்டத்தினுள் 2021 ஆம் ஆண்டில் காணிகளை சாட்டுதல் தொடர்பில் விதிக்கப்படும் முத்திரை கட்டணங்களை அறவிடுதல் தொடர்பில் 1990 இன் 07 ஆம் இலக்க நிதி விஞ்ஞாபனத்தின் 03 ஆம் பகுதியின் XXIV அத்தியாயத்தின் பிரகாரம் மாகாண மதிப்பீட்டாளரினால் குறித்த காணி தொடர்பில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு ஒன்றின் பின்னர் வழங்கப்படும் “அபிப்ராயக் கூற்று” தொடர்பில் அதிருப்தி அடைந்த ஒருவரினால் அனுப்பப்பட்ட மேன்முறையீடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் ரூபா.19,868,501 ஆன முத்திரை கட்டணம் மற்றும் ரூபா.8,260,218 ஆன தண்டப்பணத்தை செலுத்தவேண்டிய 325 பேரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேன்முறையீடுகளை விசாரித்த பின்னர் ரூபா.8,883,100 வரையிலும் முத்திரை கட்டணங்களும் ரூபா.1,199,722 வரை முத்திரை கட்டணங்களுக்காக விதிக்கப்பட்ட தண்டப்பணமும் அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய கூற்றானது தவறுதலாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மேன்முறையீடுகள் தொடர்பில் தளப் பரிசோதனையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தால் முன்னர் காணப்பட்ட முத்திரை கட்டணம் மற்றும் தண்டப்பணம் குறைவடைவது மற்றும் மேன்முறையீடு செய்தல் விஞ்ஞாபனத்தின் வரி செலுத்துவோருக்குள்ள உரிமை ஒன்று என்பது. | “அபிப்பிராயக் கூற்று” மூலம் வழங்கப்படும் மதிப்பீட்டு பெறுமதிகள் மற்றும் மேன் முறையீடுகளை விசாரித்த பின்னர் வழங்கப்பட்ட பெறுமதிகளுக்கிடையே அசாதாரணமான விலகல்கள் காணப்படக்கூடாது. அந்த பெறுமதிகளில் வேறுபாடுகள் காணப்படின் முறையான எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு பணிகளின் பெறுபேறு ரூபா 558,915,389 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மீள சீராக்கப்பட்ட பற்றாக்குறை ரூபா 1,654,409,455 ஆகும். மீளாய்வாண்டின் செலவினத்திற்கு ஒப்பாக வருமானம் மற்றும் மானியங்கள் அதிகரித்தமையால் கடந்த வருடத்தின் பற்றாக்குறையை விஞ்சி மீளாய்வாண்டின் மிகையொன்று ஏற்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 அரச மானியங்கள்

| மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறைப்பயன்பாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் (PSDG) | 2,569,000,000 | 1,349,925,500 | 1,219,074,500 |
| எடுகோள் அடிப்படையிலான மானியங்கள் (CBG) | 515,000,000 | 271,925,500 | 243,074,500 |
| பொது கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (TSET) | 220,000,000 | 209,036,281 | 10,963,719 |
| ஆரம்ப சுகாதார சேவைகளை வலுவூட்டும் செயற்திட்டம் (PSSP) | 330,000,000 | 329,467,663 | 532,337 |
| **மொத்தம்** | 3,634,000,000 | 2,160,354,944 | 1,473,645,056 |

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மேற்படி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளவாறு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மீளாய்வு ஆண்டின் | போதியளவான கட்டுநிதி விடுவிக்கப்படாமையால் இந்நிலைமை பல வருடங்களாக தொடர்ச்சியாக | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் அதிக சதவீதம் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ரூபா.3,634,000,000 ஆன நிதி ஏற்பாடுகளில் ரூபா.1,473,645,056 அல்லது 40 சதவீதமான கருத்திற்கொள்ளக் கூடிய சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இடம் பெற்றமையும் அதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைதிறனில் குறைவடைவதற்கு காரணமாக அமைந்திருந்தது. |

**3.1.2 மாகாண அபிவிருத்தி திட்டம்**

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் நடைமுறை வேலை ஆகியவற்றுக்காக ரூபா 3,940 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 2505 மும்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மாகாண சபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பணி மும்மொழிவுகளின் செயல் முன்னேற்றம் பின்வருமாறு.

| | விபரம் | புதிய பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | நடைமுறை பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணிகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | | | | (ரூபா மில்.) |
| (அ) | முழுமையாக நிறைவு செய்யப்பட்ட | 1705 | 24 | 1729 | 2028 |
| (ஆ) | 50 சதவீதத்திற்கு மேலாக நிறைவு செய்யப்பட்ட | 265 | 0 | 265 | 667 |
| (இ) | 50 சதவீதத்தை விட குறைவாக நிறைவு செய்யப்பட்ட | 334 | 0 | 334 | 1018 |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாத | 177 | 0 | 177 | 227 |
| | **மொத்தம்** | **2481** | **24** | **2505** | **3940** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (i) | 776 பணி முன்மொழிவுகள் அமைச்சின் மட்டத்தில் நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டதால் அந்தந்த அமைச்சுகளின் ஊடாக அந்த | அமைச்சின் மூலம் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் செயல் முன்னேற்றமானது வருடம் முழுவதும் | பின்தொடர் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தி |

| | | | |
|---|---|---|---|
| | பணி முன்மொழிவுகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெற்றிருக்காததுடன் செயற்திட்டங்களில் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறி உள்ளதா என்பது தொடர்பிலும் செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு அவற்றின் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய தென் மாகாண மக்களின் வாழ்வாதாரத்திற்கு, தென் மாகாண சபையின் வருமானத்திற்கு தொழில் வாய்ப்புக்கு, விவசாய பொருளாதாரத்திற்கு, கடற்றொழில் துறைக்கு மற்றும் கட்டுமானத் துறைக்கு ஆகியவற்றுக்கான தாக்கங்கள் எனுமாறு இதுவரையிலும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் ஊடாக முன்னுரிமையை ஆராயும் வேலைத்திட்டம் ஒன்று மற்றும் உரிய தகவல்கள் மற்றும் தகவல்கள் தென் மாகாண பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்திடம் காணப்படவில்லை. | கண்காணிக்கப்படும். மும்மாத செயன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ள செயற்திட்டங்கள் தொடர்பில் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்படும். எதிர்காலத்தில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்பது மற்றும் எதிர்காலத்தில் இப்பணிகளை மேம்படுத்துவதற்கு கருதியுள்ளமை. | செயற்திட்டங்களை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் முன்னுரிமையை ஆராய்வதற்கு வேலைத்திட்டம் ஒன்று மற்றும் அதற்குரிய தரவு மற்றும் தகவல் கட்டமைப்பினை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதி ஆணைக்குழுவினால் இணக்கப்பாடு வழங்கப்படும் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் அபிவிருத்தி செயற்திட்டம் ஆண்டினுள் திருத்தப்பட்டமையால் வருடாந்த அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகள் பெரும்பாலானவற்றை திருத்துவதற்கு மற்றும் அதற்குரிய அங்கீகாரத்தினை வழங்குவதற்கு பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்திற்கு நேர்ந்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | திட்டவட்டமாக இனங்காணப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை திட்டத்தில் உள்ளடக்க வேண்டும். |

## 04. பதவியணி நிர்வாகம்

### 4.1 மாகாண சபை நிறுவனங்களின் பதவியணி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மாகாணசபையின் 5,427 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் தென் மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக அமைய / பதிலீட்டு / ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1,016 ஆகும். | நாடளாவிய சேவைகளின் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியிலான பதவிகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் கீழ் ஆட்சேர்ப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக ஊழியர்களை ஆட்சேர்த்தல் மட்டுப்படுத்தப்பட வேண்டும். |

### 4.2 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| காலி கல்வி வலயத்தின் சிங்கள மொழி மூல பாடசாலைகளில் 26 பாடங்களுக்கு உரிய 363 ஆசிரியர்களின் மிகை ஒன்று நிலவுகின்ற போது வலயத்தில் அந்த பாடங்களுக்கு உரியதாக மேலும் 162 பாடசாலை ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை ஒன்றும் நிலவியது. ஆங்கிலப் பாடத்திற்காக ஒரு ஆசிரியர் ஏனும் இல்லாத 07 பாடசாலைகள் காணப்படும்போது வலயத்தில் வேறு பாடசாலைகளுக்கு ஆங்கில பாடத்திற்கு 12 ஆசிரியர்களின் மிகை ஒன்று காணப்பட்டன. | புதிய ஆசிரிய நியமனங்களை தவிர அந்த வெற்றிடங்களை நிரப்புதல் சிரமமான பணி ஒன்று என்பதும் வலயங்களுக்கிடையிலான அல்லது கல்வி மாகாண இடமாற்றல்களில் வருகை தரும் ஆசிரியர்களின் ஊடாகவும் நிரப்புதல் சிரமமானது என்பது. | உரிய முறையில் ஆசிரியர் சமப்படுத்தல் ஒன்று மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 05. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 26 செலவின தலைப்புகளின் தேறிய நிதி ஏற்பாடுகளின் கூட்டுத் தொகை ரூபா.48,434,575,361 ஆக காணப்பட்டதுடன் செலவினம் ரூபா.44,294,274,623 ஆகும். அதற்கமைய ரூபா.4,140,300,738 ஆன நிதி ஏற்பாடு எஞ்சி இருந்ததுடன் அந்த பெறுமதியில் ரூபா.633,537 முதல் ரூபா.698,682,489 இடைப்பட்ட வீச்சில் விலகல்கள் காணப்பட்டது. | அந்தந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அவதானிப்புகளை முன்வைத்து அதற்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். |